தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தி. பி. 2021 மடங்கல்/கன்னி 15/30-11-90) ஓர் உருபா (இதழ் எண்: 142)

அடிக்கடி அரசு மாறுமானால், ஆட்சி நலன் அறவே கெடும்!

அரசியல் போட்டிகள், விளம்பர வணிகப் போட்டிகளாக மாறிவருகின்ற பொழுது, மக்கள் பகடைக் காய்களாக உருட்டப் படுவார்கள்!

தவறான குடியரசு, கொடுங்கோல் முடியரசை விட மிகக் கொடுமையானது!

(முன் இதழ்த் தொடர்ச்சி)

ஆட்சியாளர்கள் அடிக்கடி ஆட்சி மாறுவார்களானால், ஆளப்படுகின்ற மக்களுக்குக் கிடைக்க வேண்டிய நலன்கள் முறைப்படி கிடைக்கப் பெறா. ஆட்சியில் அமர்ந்து விட்டவர்கள், எப்பொழுதும் தம் பதவிகளுக்கு இடையூறு நேர்ந்து விடுமோ, என்னும் அச்சத்துடன் விழிப்பாக இருந்து கொண்டு இருப்பார்களாகையால், ஆட்சி முறைகளில் மிகுந்த கவனத்தைச் செலுத்தாமல், அவ்வத் துறைகளின் நெறிகளையும் (Rules), முறைகளையும் (Regulations) கற்று அறிந்து கொள்ளாமல், எப்பொழுதும் அதிகாரிகளையே நம்பியும் சார்ந்திருப்பார்கள்; அவர்கள் சொல்வதையே கேட்பார்கள். ஆட்சியில் ஒரே கட்சியாளர்கள் தங்களுக்குக் கிடைத்த ஆட்சிக் காலமான ஐந்தாண்டுகளும் தொடர்ந்து இருப்பார்களானால், படிப்படியாக அதிகாரிகளின் பிடிப்புகளிலிருந்து தாங்கள் விலகி

(தொடர்ச்சி 3 - ஆம் பக்கம்)

Scanned with CamScanner

உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்

செய்திகள், கருத்துகள், செயற்பாடுகள்.

(துணைப் பொதுச்செயலர் பறம்பை அறிவன் அவர்களின் கருத்துகள், மடல்கள், அறிக்கைகள் முதலியன இப் பகுதியில் தொடர்ந்து வெளிவரும். தேவையானவிடத்து முதல்வர் அறிக்கைகளும், மடல்களும் அவ்வப்பொழுது இடம் பெறலாம்.)

1. கழக முதல்வர் அறிவிப்பு: (1-11-90)

1. பதவி நீக்கங்கள்:

உ.த.மு.க.வின் பல்வேறு நடைமுறைகளுக்கு உகந்த வகையில், 1-11-90 முதல் கீழ்க்காணும் பதவி விலக்கங்கள் உடனடியாக அறிவிக்கப் பெறுகின்றன.

1) *பல்லடம்: ந. முத்துக்குமரனார் அறி. இ.*
முதன்மைக் குழு உறுப்பினர்.

2) *பல்லடம்: மா. ஆறுமுகம்*
தலைவர். கோவை மாவட்டம்.

3) *பல்லடம்: ந. இளங்கண்ணன்.*
பல்லடம் வட்டத் தலைவர்.

4) *பல்லடம்: செ. ஈசுவரமூர்த்தி*
வட்டச் செயலர்.

5) *பல்லடம்: சீனி. செந்தேவன்.*
வட்டப் பொருளாளர்.

மேற்குறிப்பிட்ட அனைவரும், அவரவர் பதவிகளிலிருந்தும், பிற அனைத்துப் பொறுப்புகளிலிருந்தும் 1-11-90 முதல் முழுமையாக விடுவிக்கப் பெறுகின்றனர். இனி, அவர்களுக்கும் உ.த.மு.க. இயக்கத்திற்கும் யாதொரு தொடர்புமில்லை.

ஒப்பம். **பெருஞ்சித்திரனார்.**
கழக முதல்வர்.

2. பதவி அமர்த்தம்: 1-11-90

1). ஏற்கனவே பெரியார் மாவட்ட அமைப்பாளர் திரு. **பாவேந்தர் இராமலிங்கம்** அவர்கள், பல்வேறு வகையான தாக்கங்களால், இடைக்காலத்தில் அமைந்திருப்பதாலும், உடனடியாக சில வினைப்பாடுகள் செய்யப் பெற வேண்டிய இன்றியமையாமை கருதியதாலும்,—கடந்த 1-11-90 முதல்

புலவர். **தி. மு. அரசமாணிக்கம்**, 'மெய்யறிவு இல்லம்', 15. திருவள்ளுவர் சாலை, ஆசிரியர் குடியிருப்பு, ஈரோடு-11—அவர்கள் பெரியார் மாவட்ட அமைப்பாளராக அமர்த்தப் பெறுகிறார். அவரின் செயல்பாடுகள் இனி தொடரும்.

2. துணைப் பொதுச் செயலர் அறிக்கை :

1. உ.த.மு.க. -தமிழக நடுவக்குழு, ஆட்சிக்குழு உறுப்பினர், பொறுப்பாளர்க்கு:

வணக்கம். திருச்சியில் 20-10-90—21-10-90-இல் கூடிய நமது 'உ.த.மு.க.—தமிழக நடுவக்குழு கூட்டத்திற்குப் 'பெரும்பான்மையாக வருகை தந்த உறுப்பினர்கள் எடுத்த முடிவுகள் குறித்துக் கூறும் கருத்துகள் கீழ்க்காணுமாறு:

1) நடுவக்குழு உறுப்பினர்கள் 'முடிவுகளை அன்பர், ஆர்வலர், மக்களிடம் எடுத்துச் செல்லத் தங்களால் இயன்ற (துண்டறிக்கை வெளியிடுதல்-சுவரெழுத்து, கலந்துரையாடல் போன்ற) வடிவங்களைக் கையாளலாம்.

2) ஆட்சிக் குழுவினர், தங்கள் 'கொள்கை நெறிக்கேற்புடைய முடிவுகளின்' பேரில், மேல் நடவடிக்கை எடுக்கவும், தொடர்பு கொள்ளவும் செய்க,

3) முடிவுகளின் படி உறுப்பினர்கள் செயல்பட, உரிய உசாவலுக்குத் துணைப் பொதுச் செயலாளரிடம் தொடர்பு கொண்டு வரவும்.

4) 'ஆட்சிக் குழுவினர்,' **'தமிழ்நிலம்'** இதழுக்கும், 'கழக முதல்வர்க்கும்' விடுக்கும், 'கொள்கை நெறி' அறிவிப்புகளின் படிகளில் ஒவ்வொன்றையும் துணைப் பொதுச் செயலர்க்கு விடுத்து உதவவும்.

5) 'கழக முதல்வர்' எண்ணப்படி, உ.த.மு.க. ஆர்வலர், அன்பர்களிடம் கொள்கை பரப்புதலைச் செய்ய 'உறுப்பினர் முறை'யைத் தவிர்க்கலாம். எனவும். அறிவுறுத்தப்படுகிறது. இதன்படி, உ.த.மு.க., ஆர்வலர், அன்பர்களை அடிப்படையாகக் கொண்டியங்கும். அவர்கள் **'தமிழ்நிலம்'** வாங்கியும், பரப்பியும் வருபவர்களாக இருப்பார்கள். தங்களின் மடல்களை எண்ணங்களை நடைமுறையை எதிர்நோக்கியுள்ளேன். நன்றி.

தங்கள்,
பறம்பை அறிவன்.
துணைப் பொதுச் செயலர்.

பறம்புக்குடி
2-11-90.

(தொடர்ச்சி 11-ஆம் பக்கம்)

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நேரடியாகவே தங்களின் துறை நலன்களையும் ஆளுமைகளையும் அவர்களால் கவனிக்க முடியும். ஆனால், இடையிடையே வேறு வேறு அரசியல் காரணங்களுக்காகத் தாங்கள் மாறுதல்களுக்கு உள்ளாக்கப் பெறுவார்களானால், அதிகாரிகளின் தொடர்பின்றி அவர்கள் தம் விருப்பமாக இயங்கும்படி தங்களை எப்பொழுதுமே தகுதிப் படுத்திக் கொள்ள முடியாது.

தேசிய முன்னணி அரசு கவிழ்க்கப் பெற்று, சந்திரசேகரர், சனதா தளம் (சோ) என்னும் புதிய குழுவை உருவாக்கி, இந்நாட்டின் அரசியல் இரண்டகர் இராசீவ் கட்சியுடன் இணைந்து ஆட்சியமைத்திருப்பது, பதவிப் பித்தர்களுக்கும், அதிகார வெறியர்களுக்கும், சூழ்ச்சிக்காரர்களுக்கும், கட்சி மாறிகளுக்கும், அரசியல் கொள்ளையர்களுக்கும் மகிழ்ச்சியளிப்பதாக இருக்கலாம். ஆனால் மக்களுக்கு ஓர் ஆட்சியால் கிடைக்க வேண்டிய ஆட்சி நலன்கள் அறவே கெடுமன்றோ? மேலும் அரசியல் போட்டிகள், விளம்பர வணிகப் போட்டிகளாக மாறி வருகின்றபொழுது, மக்கள் தங்கள் நலன்களை இழப்பதுடன், தாங்கள் அரசியல் சூதாட்டக்காரர்களின் கைகளில் சிக்கிப் பகடைக் காய்களாக உருட்டப்படுகிறார்கள். இந்நிலை தொடருமானால், மக்களிடை குடியரசு உணர்வே அற்றுப்போய் விடும். தவறான குடியரசு கொடுங்கோலான முடியரசை விட மிகக் கொடுமையானது. இந்த வகையில், இப்பொழுதுள்ள அரசியல்காரர்கள் அனைவருமே பதவி, பணம், புகழ் ஆகியவற்றுக்காக அலைபவர்களாகவே உள்ளனர். மக்கள் நலம் கருதுபவர் ஆயிரத்தில் ஒருவர் இருப்பாரா என்பது ஐயமே!

இற்றை நிலையில், இந்தியாவில், அரசியல் நிலையிலும் சரி, ஆளுமை அதிகார நிலைகளிலும் சரி, பார்ப்பனர்களே மேலோங்கி யிருக்கின்றனர் என்பதை எவரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. ஆட்சியும் அதிகாரமும் எப்பொழுதுமே அவர்கள் கைகளில் உள்ளபடியே அவர்கள் இயங்குவார்கள். இதற்கென அவர்கள் பொருளியல் நிலையில் முதலாளிகளுடன் இணைந்து நிற்கிறார்கள். மத நிலையில் இந்துக்களுக்குத் தலைமை தாங்குகிறார்கள். எனவே, இந்திய அரசியலில் யார் தலைமையிடத்துக்கு வந்தாலும் அவர்களை இந்த மூன்று வலிவான கருவிகளைக் கொண்டே வீழ்த்தி விடுகிறார்கள். யாரைக் கொண்டு வீழ்த்துவது என்பது பற்றி அவர்கள் அலட்டிக் கொள்வதில்லை. யாரை வீழ்த்துவது என்பது பற்றித்தான் அவர்கள் கவலை கொள்வதெல்லாம். அவர்களிடம் என்றுமே மாறாத இச் சாணக்கிய நிலை மிகக் கொடியது. பார்ப்பனர்கள், தாமே வாழவேண்டும் என்னும் '**தாந்தின்னி**' நிலையினின்று மாறி, இக் காலத்திற்கேற்பத் தங்களைத் தகவமைத்துக் கொள்ளவில்லையானால், எதிர்காலம் அவர்களுக்கு அழிவை நோக்கியதாகவே இருக்கும். ஏனெனில் மாந்தவியல் உரிமை வளர்ச்சி மிக்கோங்கித் தழைத்து வளர்ந்து வரும் காலம் இது.

இனி, வி. பி. சிங்கைத் தலை குப்புற வீழ்த்தி விட்டு, அரசியல் கரவடர்களின் துணையுடன், குழப்ப ஆட்சி அமைத்துள்ள சந்திரசேகரர் போலும் மக்கள் நலம் கருதுவதாகக் கூறிக் கொள்ளும் சமநிலை உணர்வாளர்கள், தங்களுக்கு எதிரிகளாக உள்ளவர்கள் யார் என்பதைச் சரியாக அடையாளங் கண்டு கொள்ள வேண்டும். இந்துமதப் பார்ப்பனீய வெறியர்களாக உள்ள அத்வானியும் வாச்பேயும் வி. பி. சிங்கை முன்பு விரும்பியவர்கள் தாம்! அவர் ஆட்சி அமைக்க ஆதரவு கொடுத்தவர்கள் தாம்! பின், ஏன் அவர்கள் ஆதரவைப் பின்வாங்கிக் கொண்டார்கள் என்பதைச் சந்திரசேகரர் அறியாதவரல்லர். ஆட்சி நலத்தை விட மக்கள் நலத்தை விட, பார்ப்பனீய நலந்தான் பார்ப்பனர்களுக்கு முகாமையானது. அரசியலில் பார்ப்பனீய ஆளுமைக்கும், மதத்தில் இந்து மதத்திற்கும், மொழியில் சமசுக்கிருதத்திற்கும் அல்லது இந்திக்கும், எங்கு எங்கு தாழ்ச்சி ஏற்படுகின்றதோ, எவர் எவர் தாழ்ச்சி செய்கின்றார்களோ, அங்கெங்கு, அவரவரை வீழ்த்திப் பார்ப்பனீயத்தையும் இந்து மதத்தையும் நிலை நாட்டுவதுதான் பார்ப்பனர்களின் நோக்கம், குறிக்கோள், கொள்கை, வாழ்க்கை எல்லாம்!

எனவே, சந்திரசேகரானாலும் சரி, தேவிலால் ஆனாலும் சரி, வேறு எந்த முலாயம் சிங் யாதவ் ஆனாலும் சரி, பார்ப்பனீயத்திற்கு ஆக்கம் தருவதானால் இந்திய ஆட்சி அதிகாரத்தில் நிலைக்க வைக்கப் பெறுவார்கள்: இல்லெனில் எவ்வாறேனும் வீழ்த்தப்பெறுவார்கள். இதுதான் இந்திய அரசியல்! இதுதான் இந்து மதம்! இதுதான் பார்ப்பனீயம். இதனைச் சந்திரசேகரர் விரைவில் விளங்கிக் கொள்ளும் நேரம் வரும். எனவே ஆட்சி மாற்றமும் வழக்கம் போல் விரைவில் இருக்கும்!

ஒரு நாட்டின் பொருளியல் வளர்ச்சி நிலையை, அந்நாட்டிலுள்ள தனியொருவர் வருமானத்தை வைத்து மதிப்பிடுவதும் ஒருவகை. இந்தியாவில் 1989 - ஆம் ஆண்டில் தனியொருவர் வருமான ஆண்டுக்கு உரு. 4305. சப்பானில் தனியொருவர் வருமானம் உரு. 2,93,250. அமெரிக்காவில் உள்ள தனியொருவர் வருமானம் உரு. 2,78,550.

இந்திய அரசு நாட்டின் பாதுகாப்புச் செலவாக மட்டும் ஆண்டுக்கு 11,355 கோடி உருபா செலவிடுகிறது. இதில் கருவிகளுக்காக மட்டும் தரைப் படைக்கு 219.99 கோடியும், கடற்படைக்கு 77.55 கோடியும், வான படைக்கு 206.23 கோடியும் ஆண்டுதோறும் செலவிடப் பெறுகிறது.

o தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட தமிழர்களே ஒன்றுய்ச் சேருவோம்!
o பார்ப்பன-மேல்சாதி ஆளுமையை இன்றே வேரறுப்போம்!

மேலாளுமைச் சாதி ஒழிப்பு மாநாடு!

இடம்: கடலூர் நாள்: 25-11-1990.

தமிழக மாணவர்களே, இளைஞர்களே, பொது மக்களே...!

இன்றைக்கு வடஇந்தியப் பகுதிகளில் பார்ப்பனர்கள் எல்லாம் ஆளுமை (ஆதிக்க) வெறி கொண்டு ஆரவாரிக்கின்றனர்.

சாதிய அடிப்படையில்-பார்ப்பன, பிற மேல்சாதிய மேலாளுமையின் கீழ் உழைக்கும் மக்கள் தாழ்த்தப்பட்ட மக்களாகவும்-பிற்படுத்தப்பட்ட மக்களாகவும்-பிரித்து வைக்கப்பட்டதோடு,

பொருளியல், குமுக அழுத்தங்களின் அடிப்படையில் குறைந்த வேறுபாடே உடைய இவ்விரு பிரிவு மக்களும் ஒன்று சேர்ந்து, பார்ப்பன, மேல்சாதி மேலாளுமையை எதிர்த்து விடக் கூடாது என்ற நோக்கத்தில்—இந்தப் பார்ப்பன, மேல்சாதி மேலாளுமை வெறியர்கள் சூழ்ச்சியாக தாழ்த்தப்பட்டவர்களைப் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு எதிராகவும், பிற்படுத்தப்பட்டவர்களைத் தாழ்த்தப்பட்டவர்களுக்கு எதிராகவும், தூண்டிவிட்டு ஒருவரை ஒருவர் மோதவிட்டு, இருவரின் அரத்தத்தையும் குடித்துத் தங்கள் மேலாளுமையை நிலைப்படுத்திக் கொண்டு வருகின்றனர்.

இட ஒதுக்கீட்டை எதிர்த்து, ஒன்றுமறியாச் சிறுவர், இளைஞர், பெண்கள் மீது மண்ணெய் ஊற்றி, வலிய தீ வைத்து வெறியாட்டம் ஆடுகின்றனர். ஏன் இப்படி வெறிக் கூச்சலிடுகின்றனர் தெரியுமா? மண்டல் அறிக்கையை அரசு நடைமுறைப்படுத்துவதை எதிர்த்துதான்!

இந்திய ஆட்சியாளர்கள் மண்டல் குழு அறிக்கையைத் தங்கள் கட்சி நலனுக்கென நடைமுறைப்படுத்தினர். அப்படி என்ன இந்த மண்டல் குழு அறிக்கையில் உள்ளது? அவரவர் அப்பன் தொழிலை மகனும் செய்ய வேண்டும்—எனப் பார்ப்பனர்கள் கட்டாயப்படுத்தி சட்டமியற்றியதால்—கடந்த காலங்களில்—உழவன் வீட்டுப் பிள்ளைகளோ, முடிவெட்டுவோர் வீட்டுப் பிள்ளைகளோ, மலம் அள்ளுவோர் வீட்டுப் பிள்ளைகளோ, துணி துவைப்போர் வீட்டுப்பிள்ளைகளோ, மீன் பிடிப்போர் வீட்டுப் பிள்ளைகளோ, பள்ளிக் கூடங்களை எட்டிப் பார்க்க முடியவில்லை.

அதுபோன்ற மேலாளுமை வெறிச் சட்டத்தைப் போட்டு, நடைமுறைப் படுத்தியதில் இராசாசி வரை எல்லாப் பார்ப்பன, மேல்சாதியர்க்கும் பங்கு உண்டு.

இதனால் கல்வி மணமே இல்லாத நம் குடும்பப் பிள்ளைகள்...கடந்த தலைமுறைகளில்தாம் பள்ளிக்கூடங்களையே எட்டிப்பார்த்தனர்.

தலைமுறை, தலைமுறையாகப் படித்து வருகிற, பார்ப்பன மேல்சாதியருடன்—நம் பிள்ளைகள் போட்டி போட முடியவில்லை. இந்த நிலையில்—மதிப்பெண் அடிப்படையில் உயர்கல்வி என்பதும், வேலைவாய்ப்பு என்பதும்—கொழுத்து வலுவான ஒருவனுக்கும்—

கஞ்சி குடிக்க வழியற்ற நோஞ்சானுக்கும் சண்டையிட வைத்துத் தேர்வு செய்து, பரிசு கொடுப்பது போன்றதாகும்.

இதைத்தான் எதிர்த்து, நீதிக்கட்சியினரும், அதைத் தொடர்ந்து தந்தை பெரியாரும்—அவரவர் சாதிகளின் விழுக்காட்டுப்படி, கல்வி, வேலை வாய்ப்புக் கொடுக்க வேண்டும்—என்று போராடினர். பெரியார், தமிழகத்தில் போராடியது போன்று, அம்பேத்கார் ம(கா)ராட்டியத்தில் போராடினர். அவர்களின் போராட்டங்களினுல் கிடைத்த சலுகை சிலவாகவே இருந்தன. சாதிகளின் விழுக்காட்டுப்படி வேலை வாய்ப்பு, கல்வி வாய்ப்பு எனும் நிலை வந்ததா என்றால், இல்லை. சாதி விழுக்காட்டுப்படி கொடுத்தால், தமிழகத்தில்——தாழ்த்தப்பட்டவர்க்கு 25 முதல் 30-விழுக்காடு வரையிலும், பிற்படுத்தப்பட்டவர்க்கு—55 முதல் 60 விழுக்காடு வரையிலும், பிற மேல் சாதியினர்க்கு 17 முதல் 20 விழுக்காடு வரையிலும், பார்ப்பனர்க்கு 3 முதல் 5 விழுக்காடு வரையிலும், கல்வியிலும், வேலை வாய்ப்பிலும் இட ஒதுக்கீடு கொடுக்க வேண்டும். ஆனால் இன்றைக்கு—100—பேர் வேலை செய்கின்ற, இந்திய அரசு அலுவலகங்களில், நிறுவனங்களில், தொழிலகங்களில், கல்வி நிலையங்களில் பார்ப்பன—மேல் சாதியினர் 90 விழுக்காட்டுக்கும் மேலான இடத்தையல்லவா அமுக்கிப் பிடித்துக் கொண்டுள்ளனர். இப்படி, இவர்கள் பிடித்துக் கொண்ட இடத்தை அடிமைச் சாதியினர் வந்து அமர வேண்டுமென முறையிடுவதே மண்டல் குழு அறிக்கை. அஃது இத்தனைக்கும் 50—விழுக்காடு பிற்படுத்தப்பட்டோருக்கும் 25-விழுக்காடு தாழ்த்தப்பட்டோருக்கும் என இட ஒதுக்கீடு கேட்கவில்லை. அந்த மேலாளுமைச் சாதி வெறியர்கள் தில்லி உச்ச வழக்கு மன்றத்தின் மூலம் 50—விழுக்காட்டிற்கு மேல் எந்த இட ஒதுக்கீடும் கூடாது என ஆணை போட்டுள்ளனர்.

எனவே, 22.5-விழுக்காடு தாழ்த்தப்பட்டவர்க்கும், 27-விழுக்காடு பிற்படுத்தப்பட்டவர்க்கும்—என்றே

Scanned with CamScanner

பரிந்துரைக்கிறது மண்டல் அறிக்கை. இதையும் எதிர்த்தே இந்த ஆர்ப்பரிப்பு.

இந்த வகையில்—இட ஒதுக்கீடு கொடுத்தால் நாட்டின் ஆட்சியமைப்பு சீர்குலைந்து விடுமாம்! இந்த மேலாளுமைச் சாதி வெறியர்கள்—அரசு அதிகாரங்களில் (நடுவர்களாக, காவல் துறை அதிகளாக, ஐ. ஏ. எசு. அதிகாரிகளாக) இருக்கவே, இன்றைக்குக் கையூட்டு, ஊழல், வேலை வாய்ப்பின்மை, பஞ்சம், பசி, பட்டினி, வெளிநாட்டுக் கடன், வெளிநாட்டுக்குக் காட்டிக் கொடுப்பது, இவையெல்லாம் நடக்க, ஆட்சியமைப்பு சீரழியவில்லையா?

ஆக—தங்கள் மேலாளுமையை நிலைநிறுத்திக் கொள்ள இவர்கள் பல முயற்சிகள் எடுக்கின்றனர். சாதி வழி பிரிப்பது தவறு—சாதி வழி பார்ப்பது தவறு—என்று இன்று கூறுகிற பார்ப்பனர்கள் சாதிவழிப் பாராமல் இன்று—மலம் அள்ளவோ—முடிதிருத்தவோ—துணி துவைக்கவோ—உழவு செய்யவோ—முன் வருவார்களா? வர மாட்டார்கள். ஏன்...? கொள்ளைக்கே இடமாய் உள்ள கோயில் பூசாரிகளாக—சங்கர மடத் தலைவர்களாகவாவது, தாழ்த்தப்பட்டவர்களை வைப்பார்களா? வைக்க மாட்டார்கள்.

அதற்கு மட்டும் இவர்களுக்குச் சாதி வேண்டும். எனவே, மாணவர்களே, இளைஞர்களே...

முள்ளை முள்ளால் தான்எடுக்க முடியும். சாதியை சாதி மூலமாகவே ஒழிக்க முடியும்.

அம்பேத்கார் சொன்னது போல்—

—சாதி என்ற நுழைவாயில் அற்ற பல அடுக்குக் கோபுரத்தை,

—கோபுர உச்சியில் குடியிருக்கிற பார்ப்பான் அழித்து ஒழிக்க நினைக்க மாட்டான்—அவனால் முடியவும் முடியாது.

—இடையில் இருப்பவனோ அவன் அவனவனுக்கு மேல் இருப்பது மட்டும் அழிக்கப்பட வேண்டும் என நினைப்பான். அவனே முழுமையாக அழித்து விட மாட்டான்.—அடியில் அனைத்துச் சுமைகளையும் தாங்கி நிற்பவனே அதை ஒழிக்க முடியும். எனவே, அச் சாதியை ஒழிக்க தாழ்த்தப்பட்ட உழைக்கும் மக்கள் தலைமையில் பிற்படுத்தப்பட்டவர்கள் ஒன்றிணைந்து போராடுவதாலேயே முடியும்.

அப்போராட்டத்திற்கு—குமுகச் சிந்தனையுள்ள பிற மேல் சாதியினரை அவர்களின் தலைமை மறுக்கப்பட்ட நிலையில் இப் போராட்டத்திற்கு ஏற்றுக் கொள்வதும்,—பார்ப்பனர் இணைப்பை முற்றிலும் தவிர்ப்பதும்—இன்றியமையாதன.

இந்தச் சூழலில்-இந்தியாவில் உள்ள இந்தத் தன்மையில் எல்லாம் இணைந்து போராட வேண்டும்—என்கிற நிலையில்—இந்தியாவின் சூழல் இல்லை.

—தமிழ்நாட்டில் உள்ள குமுகத் தன்மை அடிப்படையிலேயே காசுமீரத்தில், மிசோரத்தில்—நாகாலாந்தில் — அசாமில்—பஞ்சாபில் சூழல் இல்லை.

—சில பகுதிகளில் சாதி நிலைகளே இல்லை. மேலும்-நாம் போய் இன்னொரு பகுதியிலுள்ள மக்களைப் புரட்சிக்கு அணி திரட்ட முடியாது.—நம் தமிழ் நாட்டுச் சூழலை உணர்ந்த நாமே—நம் பகுதி ஒடுக்கப்பட்ட மக்களை அணி திரட்ட முடியும். ஆக, —இந்தியா முழுவதும் ஒரே சமயத்தில்-ஒரு சமூக மாற்றம் வரும் என எண்ணுவது கனவு காண்பதாகவே முடியும்.

எனவே நாம்-நம் தமிழ்நாட்டில்-நம் குமுக மாற்றத்திற்கு என எழுச்சி கொள்வோம்!

நம் தமிழ்நாட்டில் உள்ள—பார்ப்பன, மேல் சாதிய மேலாளுமை வெறியர்களை எதிர்ப்போம்!

அவர்களின் மேலாளுமை வெறி உணர்வுகளை வெட்டி எறிவோம்!

தமிழ்நாட்டில் சாதி அடிப்படையில், அவரவர்க்குக் கல்வி வாய்ப்பு, வேலை வாய்ப்பு—என்கிற நிலையில்-அத்துறைகளில் பார்ப்பன, மேல் சாதிய மேலாளுமையை வேரறுப்போம்!

அதிலிருந்து—அடித்தட்டு. தாழ்த்தப்பட்ட உழைக்கும் மக்களின் தலைமையில்—தமிழக மக்கள் குடியாட்சி அரசு அமைக்கப் போராடுவோம்! அதுவே தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட தமிழர்களான நமக்கு விடிவுக்காலம்—விடுதலைக் காலம்-என உணர்ந்து போராடுவோம்! வாருங்கள்!

தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட தமிழர்களே ஒன்றுய்ச் சேருவோம்!

பார்ப்பன, மேல்சாதி ஆளுமையை இன்றே வேரறுப்போம்!

- சாதிகளின் விழுக்காட்டுப்படி வேலைவாய்ப்பு, கல்வி போன்ற அனைத்துத் துறைகளிலும் தமிழகத்தில் உள்ள இந்திய, தமிழக அரசு, தனியார் துறை அலுவலகங்களில், நிறுவனங்களில் முழுமையான இட ஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்தப் போராடுவோம்!
- ஒடுக்கப்படுகிற, தாழ்த்தப்பட்ட தமிழர்களே ஒன்றுய்ச் சேருவோம்!
- பார்ப்பன மேல் சாதி ஆளுமை வெறியை இன்றே வேரறுப்போம்!
- தமிழக மக்கள் விடுதலைக்குப் போராடுவோம்!

அழைக்கப் பெறுவோர்:

மாணவர்-இளைஞர் அரங்கம்:

தெ. ஆ, மா. திருச்சி மாவட்ட இளைஞர் மாணவர் அமைப்புகள்.

கருத்தரங்கம்:

அ. மார்க்சு, தங்கராசு, குணா.

Scanned with CamScanner

உ. த. மு. க.

தமிழக நடுவக்குழு திருச்சியில் 20-10-90-21-10-90-இல் துணைப்பொதுச் செயலர் தலைமையில் கூடி எடுத்த முடிவுகள்.

1. திருச்சி நாவல்பட்டுக் காவலர் குடியிருப்பைத் தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழக நகரப் பேருந்துகளில் 'போலீசு காலனி' என்றிருப்பதை மாற்றிக் 'காவலர் குடியிருப்பு' என்று வழங்க அதன் செயல் மேலாளர்—மாவட்ட ஆட்சியாளரை உ.த.மு.க., தமிழக நடுவக்குழு கேட்டுக் கொள்கிறது.

2. மண்டல் ஆணைக் குழு பரிந்துரையை எதிர்த்து வடக்கிலும், தமிழகத்திலும் வன்முறையைத் தூண்டும், பாரதீய சனதா, ஆர். எசு. எசு, இந்து முன்னணி, பாரதீய கிசான் சமிதி, சிவசேனை போன்ற சாதிய, மதவெறி அமைப்புகளை உ.த.மு.க. தமிழக-நடுவக்குழு கண்டிக்கிறது.

3. உச்ச நயன்மை மன்றம், மண்டல் ஆணையை நடைமுறைப்படுத்த இடைக்காலத் தடையிட்டதைத் திரும்பப் பெறல் வேண்டும் என உ. த. மு .க. தமிழக-நடுவக்குழு கோருகிறது.

4. தமிழகத்தில், தமிழ்வழிக் கல்வியைக் கொண்டு வர, ஒரே மொழிக் கொள்கைக்காக உ.த.மு.க. போராடும்.

5. 'வாழ்வினில் செம்மையைச் செய்பவள் நீயே' என்ற புரட்சிப் பாவலரின் பாடலைத் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலாகத் தமிழக அரசு ஏற்புச் செய்து, அரசாணை வழங்குதல் வேண்டுமென உ. த. மு. க. வேண்டுகிறது.

"நீராருங் கடலுடுத்த..." என்ற மனோன் மணியம் சுந்தரம் அவர்களின் பாடலின "ஆரியம் போல் உலக வழக்கழிந்கொழிந்து சிதையா..." என்ற உயிர்க் கருத்தை நீக்கித்'தமிழ்த்தாய் வாழ்த்தினை'மூடமாக்கிய வரலாற்றுத் தவறைத் திருத்திக் கொள்வதன் மூலம், பேரா. மனோன் மணியம் சுந்தரத்திற்குப் பல்கலைக் கழகம் காணும் பெருமையை நிலை நிறுத்திக் கொள்ளும்படி தமிழக அரசை உ.த.மு.க. கோருகிறது.

6. தமிழீழத்தை இந்திய அரசு ஏற்புச் செய்தல் வேண்டுமென்றும், தமிழக அரசு இதற்கான தீர்மானத்தைச் சட்ட மன்றத்தில் நிறைவேற்றல் வேண்டுமென்றும் உ.த.மு.க. கோருகிறது.

7. கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் — சென்னை-600006. ந. க. எண் 043812/த6/90 நாள் 8-6-90, தமிழகத்தில் இந்தி மொழியைப் பரப்பத் திட்டமிடும் இந்தி(ய) அரசின் சூழ்ச்சிக்குத் தமிழக அரசும், கல்வித் துறையும் பலியாகியிருப்பதைக் காட்டுகின்றன. இதற்கு உ.த மு.க. கண்டனம் தெரிவிக்கிறது.

8. உ.த.மு.க. பொதுச் செயலரை அமர்த்தம் செய்து அறிவிக்கக் 'கழக முதல்வரை'த் தமிழக-நடுவக்குழு வேண்டுகிறது.

9. தலைமைப் பொருளரை நடுவக்குழுவிலிருந்து அமர்த்தம் செய்ய, உ.த.மு.க. தமிழக-நடுவக்குழு, துணைப் பொதுச் செயலரை வேண்டுகிறது. அதற்குத் திரு. நிலாவேங்கடவன் அவர்களைப் பரிந்துரையும் செய்கிறது.

10 மழலையர் ஆங்கிலப் பள்ளிகளைத் தமிழகத்தில் நடத்துவதைத் தமிழக அரசு தடை செய்ய வேண்டுமெனக் கோருகிறது.

11. உ.த.மு க.-தமிழக நடுவக்குழு உறுப்பினர் நடைமுறைச் செலவிற்கு உருபா 25/-என வழங்கியதைப் பாராட்டுவதோடு, அவர்கள் நடுவக் குழு செலவிற்கெனத் தொடர்ந்து ஆண்டிற்கு உருபா 50/-என வளர்ச்சிக் கொடை தருவதெனவும் முடிவெடுக்கிறது. கீழ்க்காண்பவர்கள், முறையே,

திரு. குழந்தை ஈகவரசன்	உருபா	25/-
,, தி. மு. அரசமாணிக்கம்	,,	50/-
,, பாவலர். தமிழ்க்கனல்	,,	50/-
,, இரா. பாண்டியன்	,,	50/-
,, த. தமிழ்த்தென்றல்	,,	50/-

எனும்படி ஆண்டிற்கு அதிகப்படியான பங்களிப்புச் செய்ய முன் வந்ததை உ.த.மு க. பாராட்டுகின்றது; பலரும் அதிகப் பங்களிப்புச் செய்வார்கள் எனவும் எதிர்பார்க்கிறது!

12. உ.த.மு.க. தமிழக-நடுவக் குழு சார்பில் பற்றுமுறி 2000 அடங்கிய பொத்தகங்களும், ந.கொ. பற்றுமுறி 3000 அடங்கிய பொத்தகங்களும் அச்சிட்டு வழங்கும் பொறுப்பைத் திரு.

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

(முன் பக்கத் தொடர்ச்சி)

விளக்கவுரைகள்:

தமிழ் மாறன், அம்பேத்கார் பிரியன், ப.அருளி வடிவேல் இராவணன், பா. கல்யாணி, அரங்க. முருகையன, சந்திரபோசு, பஞ்சாட்சரம்.

பாவரங்கம்:

இன்குலாப், அக்கினி புத்திரன், பழமலை, அறிவுமதி, தமிழ்மணி.

பொது அரங்கம்:

பெருஞ்சித்திரனார், ஆனைமுத்து, தி. இராமதாசு, மணியரசன். கு. இராமகிருட்டிணன்.

—தமிழ்நாடு இளைஞர் பேரவை
—தமிழ்நாடு மாணவர் பேரவை

ஒரு வெளிநாட்டுப் பார்வை

பணப் போர்!

-த- அரிமா வளங்கோ-பிரான்சு

உலகை உலுக்கிக் கொண்டிருக்கும் ஈராக்கு-அமெரிக்கப் போர் உண்மையில் யாருக்காகப் போடப் படுகின்றது? ஏழை அரசுகளுக்காகவா? அமெரிக்கா-ஐரோப்பாவின் தொழிலாளர்களுக்-காகவா? இந்தப் போரை மூன்றும் உலகப் போராக ஆக்குவதற்கு அனைவரும் துடிக்கும் காரணம் என்ன? கரிநெய் அளங்களை உடையதோர் அரபுப் பணக் நாடு இன்னொரு நாட்டை (குவெய்த்து) கைப்பற்றியது; உடனே சுற்றிலுமுள்ள மற்ற பணமலை-களான சவூதி அரேபியா, சிரியா, அரபு இணைப்பு நாடுகள் போன்றவை உதவிக்கு அமெரிக்கனை-ஆங்கிலனை-பிரஞ்சுக்காரனை-மற்ற உலக நாடுகளை அழைத்துக் கொள்ளை கொள்ளையாய்க் கொட்டிக் கொடுத்து உலகப் பெரும் போருக்கு வழி தேடு-கின்றனர். ஏழை பங்காளன் புனைவும் (வேடமும்) உண்மையான இசலாமியன் என்ற புனைவும் போட்டு உலகைக் கலக்கி வரும் ஈராக்கின் சதாம் உசேன் அப்படி என்ன நல்லவன்? கடந்த காலத்-தில் அவனுல் அந்த நாட்டின் சிறுபான்மை இன மக்கள்-குருது (KURDS) கடுவளிக் குண்டுகளால் (Petro-Chemical Bombs) ஆயிரக்கணக்கில் குழந்தைகள் — பெண்கள் — முதியோர் என்று வேற்றுமை பாராது ஒரே நாளில் படுகொலை செய்யப் பட்டனரே!

அரபுகளின் நிலங்களில் கன்னெய் (பெட்-ரோல்) வணிகத்திற்கு நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டு அலையும்-பணம் பண்ணுவதே குறியாகக் கொண்ட—ஐரோப்பியரும், அவர்களின் கான்முளையாகிய அமெரிக்க அரசும் இது வரை மற்ற மற்ற உலகப் பகுதிகளில் இது போன்ற அத்து மீறல்களும் நாடு கவர்தலும் கொள்ளையடிப்பு-களும் நிகழ்ந்த போது ஏன் இப்போது காட்டு-வதைப் போன்ற சுறுசுறுப்பையும் கெடுபிடியையும் காட்டவில்லை?

ஏனென்றால், கன்னெய் பொன்னுக்கு ஈடாக மதிக்கப்படுகின்றது. கன்னெய் பற்றுக்குறையால் பொருளியல் அதிர்ச்சிகள் பல நாடுகளின் தலை-யெழுத்தையே மாற்றிய வரலாற்றை 1973 முதல் இரண்டு முறை உலகம் கண்டு வந்துள்ளது.

கன்னெய் பற்றுக்குறையைப் போலியாக ஏற்-படுத்தினல் உடனே சரிந்து வரும் அமெரிக்க டாலர் காசுக்கு (Dollar) மதிப்பு கூடி விடும். இதன் திரோலியாகத் தங்கம் படிப்படியாக விலையேறி நாட்டின் பொருளியலையே மாற்றி விடும். இதனுல் திடீர்ப் பணக்காரர்களாக ஆன நாடுகள் பல. ஓட்டாண்டியாகி-வெளிநாட்டுக் கடன்களுக்கு வட்டி கூடக் கட்ட முடியாமல் நிலைகுத்திப் போன ஏழை நாடுகள் பற்பல.

இப்படிக் கன்னெய்ச் சூதாட்டத்தால் கிடைக்-கின்ற திடீர் ஊதியத்தில் ஒரு துளியை ஏழை நாடுகளின் வரட்சிக்கும், பட்டினியைப் போக்கு-வதற்கும், முன்னேற்றுவதற்கும் எடுத்துத் தந்து பெருமைப் பட்டுக் கொள்வது ஐரோப்பிய—அமெரிக்கருக்குக் கை வந்த கலை,

கன்னெய்யைப் பயன்படுத்தும் உலக மக்களுள் 97 பேர் மிகவும் ஏழைகளே! கன்னெய் கிடைக்கும் நாடுகளில் அதிக அளவு மிக நீண்ட காலத்திற்குக் கன்னெய் மண்டிக் கிடக்கும் என்று கணிக்கப் பட்டுள்ள நாடு சவூதி அரேபியா! அண்மையில் நடந்த புதிய ஆய்வில் சவூதியை விட ஈராக்கில்தான் மிக அதிக அளவு கன்னெய் தேங்கிக் கிடப்பதாகக் கண்டறியப் பட்டதைத்

(முன் பக்கத் தொடர்ச்சி)

தி. மு. அரசமாணிக்கம் அவர்களிடம் 'நடுவக்குழு' ஒப்படைக்கிறது.

13. உ.த.மு.க. தமிழக நடுவக் குழுவின் தலைமைக் குழு உறுப்பினர்களாகத் திரு. தி. மு. அரசமாணிக்கம், திரு; பாவலர். தமிழ்க்கனல் இரு-வரையும் நடுவக்குழு தெரிவு செய்கிறது.

14. உ.த.மு.க. தமிழக ஆட்சிக்குழு உறுப்-பினர்கள் கீழ்க்காணுமாறு அமர்த்தப் படுகின்றனர்.

(i) தூய தமிழ் ஆய்வியக்க நெறியாளர்—திரு. குழந்தை ஈகவரசன்.

(ii) சமநிலைக் குமுகாய முனைப்பியக்க-நெறியாளர்—திரு. மா. செ. தமிழ்மணி

(iii) அரசியல் ஆவணக் களரி நெறியாளர்—திரு. க. சுண்ணன்.

(iv) கலை வளர்ச்சி இயக்க நெறியாளர்—திரு. அதியமான்.

(v) பண்பாட்டுப் பரிமாற்றச் செயலக நெறி-யாளர்—திரு. ப. முருகவேள்.

(vi) உ.த.மு.க. தமிழகத் தலைமைக் கழக அமைப்புச் செயலர்—திரு. த. தமிழ்த் தென்றல்.

15. உ.த.மு.க. துணைப் பொதுச் செயலரின் வரைவின் மீது நடுவக் குழு கொண்டு வந்த திருத்தம் பெற்ற அவ்வரைவினை அச்சிட்டு உறுப்-பினர்களுக்கு வழங்கவும்—தீர்மானம் மற்றும், அறிவிக்கைகளை அச்சிட்டோ, உருட்டச்சு செய்தோ பொறுப்பாளர்களுக்கு வழங்கவும் உ. த. மு. க. தமிழக நடுவக்குழு முடிவெடுக்கிறது.

கழக. முதல்வர்'—மேல் கை ஒப்பந்திற்கு
பறம்பை அறிவன். 30-10-90
து.பொ.செ.

தொடர்ந்து இப்போருக்கான முன்னேற்பாடுகளை ஐரோப்பியர் செய்தனர். அமெரிக்காவின் அணியில் உள்ள நாடுகள் ஈராக்கிற்கு அண்டை நாடுகளில் படைக் கருவிகளைக் குவிப்பது; உருசியாவின் பின்னணி நாடுகள் ஈராக்கிற்குக் கொலைப் படைக்கலன்களைத் தந்து வந்தன. பிரான்சு, செருமனி, இத்தாலி போன்ற நாடுகள் கடு வளிக் குண்டுகள் (Petro - Chemical Bombs) செய்வதற்கும், அவற்றைப் பயன்படுத்தும் கருவிகள் முதலானவற்றிற்கும் பொறுப்பேற்று வந்தார்கள்.

இப்போது திடீரென்று ஏற்பட்ட "குவெய்த்து" சிக்கலால் வேறு வழியில்லாமல் அமெரிக்க அணிக்குத் தலையையும் உருசிய அணிக்கு வாலையும் இந்த நாடுகள் காட்டி வருகின்றன. இப்போர் தொடங்கிய அடிப்படை இதுதான்!

அமெரிக்காவின் பாதுகாப்பு அமைச்சர் வெயின் பெர்செர் கடந்த சூன் 1981-இல் ஒரு கருத்தை அறிவித்தார். "அமெரிக்கப் படைகள் ஒரே சமையத்தில் ஐரோப்பாவுக்குள் ஒரு போரையும், நடுகிழக்கு அரபு நாடுகளிடையில் ஒரு போரையும் பேரளவில் சந்திப்பதற்கு அணியமாக இருக்க வேண்டும்" என்பதே அவரது கூற்று!

உலக நாடுகளிடையில் அமைதி, பேச்சுத் தீர்வு, அமைதிக்கான கூட்டணி அமைத்தல், படைக் கருவிக் குறைப்பு, மேற்கு-கிழக்கு, வடக்கு-தெற்கு என்று அணி பிரிந்து நிற்பதை அறவே கைவிடுதல்-என்று பல கோணங்களில் அமைதிக்கான வழிமுறைகளை வல்லரசுகள் அறிவித்த வண்ணம் உள்ளன. பொதுவாக, இது போன்ற வக்கணைச் சொற்களைப் பயன்படுத்துவதையே போருக்கு அணியமாகும் உத்தியாக வல்லரசுகள் கைக் கொண்டு வரும் நடைமுறை மரபு ஆகும்.

உலகளாவிய ஒரு பெரும் போருக்குத் தற்போது ஏற்பாடு நடப்பதை நாம் உணரலாம். மேலை நாட்டுப் பணத் திமிங்கிலங்களும் கீழை நாட்டுப் பணக் கொழுப்பேறிகளும் உலகத் தரையில் வெடி குண்டுகளையும், ஏவுகணைகளையும், எல்லா வகையிலும் கொலைக்குரிய கருவிகளையும் பரப்பி மாந்தனை மாந்தன் அடிமை செய்து ஆண்டாண்டுக்காலம் தொடர்ந்து ஆண்டு கொண்டிருக்க வழி தேடி வருகின்றனர்.

கன்னெய் (petrol) அளங்கள் மண்டிய அரபு நிலத்தில் முதலாளியக் கைகள் மிக முடுக்கமாகப் போருக்கு முனைந்து வருகின்றன; முன் எப்போதும் கண்டும் கேட்டும் இராத அளவுக்கு உயிர்க் கொலையும் வன்முறையும் வெடித்து விடக் கூடிய போரச்சம் முடுகி வருகின்றது; ஒவ்வொரு வெடிப்-போராலும் ஆயிரக்கணக்கில் பாட்டாளிகளும், வேலையற்று வறுமையுள் கருகிடும் இல்லாதவரும், ஏதுமறியாதவர்களும் போர்க் கைகளில் நசுக்கப் பட்டு அழிகின்றனர். "கன்னெய் (petol peace) அமைதி' காக்க-அல்லது பலத்தீனத் தனித் தாயகம் காண என்று கூறிக் கொண்டே பலத்தீனச் செல்வரைக் காப்பதற்கு-அல்லது கன்னெய் மன்னர்களின் களியாட்டக் கொட்டாரங்களையும் கொம்மாளக் கேளிக்கைகளையும் ஐரோப்பிய-ஆசியாவில் சூதாடும் களங்களையும் சிதைந்து போகாமல் பார்த்துக் கொள்வதற்கு—என்று இப்படி யாதனுமொரு காரணத்தைக் காட்டி, இல்லாத பலர் போராடி, அரத்தம் வெளிறிச் சாவதற்கு வழி வகை, அரபு நாடுகளில் நிலவி வருகின்றது.

1948—இல் இசரயேல் நாடு உருவானதையொட்டி முதல் யூத அரபுப் போர் நிகழ்ந்தது;

1956—இல் சூயசு கால்வாயைத் தம் கட்டுப்பாட்டில் வைத்திருக்க போர் ஏற்பட்டது;

1967—இல் இசரயேலுடன் "ஆறு நாள் போர்" என்ற பெயரில் அரபு நாடுகள் மோதின;

1973—இல் அக்டோபர் போர் எனப்படும் கிப்பூர் சண்டை;

1975—இல் இலெபனனில் உள் நாட்டுப்போர்; 13 மாதங்களில் 60000 பேர் சாவு;

1979—இல் ஆப்கானித்தானத்தை உருசியா ஊடுருவியது;

1980—இல் ஈரான்-ஈராக்கு (பாரசீக-பாபிலோனியப்) போரின் தொடக்கம்;

1982—இல் பெய்ருத்தில் (இலெபனனின் தலைநகர்) சண்டை; சப்ரா-சதீலா என்னும் இரு பலத்தீனிய ஏதிலித்தங்கல்களை (Refugee Camps) அரபுகள் துணையுடன் யூதர்கள் திறந்து விட,அங்கிருந்த பாலத்தீனியர்களை இலெபனனின் துருசுகள் எனப்படும் அரபியரோ அழித்து ஒழித்த கொடிய நிகழ்ச்சி 1983-இல் நடந்தது.

1990—இல் குவெய்த்தை ஈராக்கு தன்னுடன் இணைத்துக்கொண்டதாக அறிவித்துள்ளது; உலக நாடுகளின் படைகள் தலையிட்டுவிடக் கூடிய பெரும் போரச்சம் ஏற்பட்டுள்ளது.

முதல் கன்னெய் அதிர்ச்சி (Petrol Shock) 1973-இல் ஏற்பட்டது; அது முதல் முதலாளிய நாடுகளுக்குள் ஏற்பட்ட போட்டி பரவலாகி அரபு வட்டாரங்களில் போர்ச் சூழலை வளர்த்து விட்டது. பற்றுக்குறை ஏற்பட்டு விடுமோ என்று கன்னெய்யைப் பயன்படுத்தும் உலகம் பொது மக்களுக்குக் கவலையை விசிறி விட்டு, விலையை ஏற்றியும் பொருளியலை தம் விருப்பத்திற்கு முடக்கியும், நலிவுற்ற வளரும் நாட்டைப் படைக் கருவிகளாலும் போர் உத்திகளாலும் முன்னேறவொட்டாதபடி நிலைகுலையச் செய்தும் பொன்னையும் அதனால் முதலாளிய நாடுகளின் பண வலிவை

(Dollar) பன்மடங்கு விலையுயர்ந்ததாக ஆக்கியும், உலக மக்களை முட்டாள்களாக்கியும் முதலாளிய நாடுகள் முன்னேறி வருகின்றன.

தொடக்கத்தில் கிரேக்க-துருக்கி நாடுகளுக்குள் பூசல் மூண்டது. கிரேக்கரின் பிடியிலிருந்த சைப்பிரசு தீவை துருக்கி வலிந்து கைப்பற்றியது. (ZAIRE) சாயிர் நாட்டிலும், தென்னாப்பிரிக்காவிலும் கன்னெய்க் காசுகளால் வைரச் சுரங்கங்கள் கைமாறின. பாலைநிலத்தில் கன்னெய் கிடைக்கலாம் என்பதற்காக மொரிட்டானியா மொரோக்கோ, அல்சீரியா, நாடுகள் சகாராப் பாலைநிலப் போரில் ஈடுபட்டன. எகிப்திலும், சோமாலியிலும், எத்தியோப்பியாவிலும் அரசுகள் தங்கள் கூட்டணிகளை அடிக்கடி மாற்றி அல்லலுற்றன; அங்கெல்லாம் பஞ்சத்தாலும் பண வஞ்சத்தாலும் கோடிக்கணக்கில் மக்கள் பட்டினிச் சாவுக்காளாயினர்.

உலகப் பெருமுதலாளிகளின் கணக்கில் எங்குப் பார்த்தாலும் மாந்த உயிர்களைப் பிழிந்த குருதி கரை புரண்டோடியது. அமைதிப் புறாக்கள் வடிவு கொண்ட கொடிய வல்லூறுகள் அமைதித் திட்டங்களைப் பறைசாற்றின. போரை அவரே மூட்டிவிட்டு அதன்பின் அமைதிக்கான பேச்சுத் தீர்வுக்கும் அவரே உழைத்ததற்தாக கிசிஞ்செர் (KISSINGER) அமைதிக்கான "நோபல்" பரிசினைப் பெற்றுர், புதுப்புது படைகளைக் கொண்டு கன்னெய்ப் போருக்கு அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்சு முதலான நாடுகள் அரபுப் பகுதிகளில் நிலைக் களங்களைத் தொடர்ந்து ஏற்படுத்தி வந்தன.

கன்னெய்ப் போருக்கு (Petrol war) கருத்து வடிவம் தரப் படுகின்றது; அதனைச் சரியானது என்று காட்டுவதற்கும் முயற்சி நடக்கின்றது. கிழை நாடுகளிலும் மேலை நாடுகளிலும் பொது வாழ்வுக்குக் கட்டுப்பாடுகள் வரைமுறையின்றிப் பெருகி வருகின்றன, பொது மக்கள் மேன் மேலும் ஏதிலிப் பட்டாளங்களாகி வருகின்றனர். ஏதிலிகளைத் தேக்கி வைக்க நடுக்கிழ் ஆசிய (அரபு) நாடுகளிலும், கிழை ஐரோப்பிய முன்னாள் பொதுவுடைமை நாடுகளிலும், இலத்தின் அமெரிக்க நாடுகளிலும், ஆப்பிரிக்க நாடுகளிலும், அமெரிக்க சிவப்பிந்தியர்களுக்கு இன்னும் சொந்தமாகவுள்ள பகுதிகளிலும் தங்கில்கள் (RefugeeCamps) அமைக்கப் பட்டு வருகின்றன.

தற்போது யோர்தானில் (JORDANIA) தேக்கி வைக்கப் பட்டுள்ளதைப் போனற ஏதிலித தங்கில்களில் உள்ளோர் எதற்காவது முரண்டு பிடித்தால் அனைத்துலக நாடுகளின் படைகளும் அரக்கத்தனமாகக் கொடுங்கொலையும் கூட்டுக் கொலையும் கூசாமல் செய்து அடக்குகின்றன.

தெல்-அல்-சத்தாரில் (TELL-EL-ZAATAR) 1976-இலும், சப்ரா-சதிலாவில் 1983-இலும், யோர்தானிய நாட்டில் பலத்தீனர்களை உசேன் மன்னன் 1970-இலும் (கருப்பு செப்டம்பர் என்று வரலாற்றில் இதனைக் குறிக்கின்றனர்.) சூலை 83-இல் யாழ்ப்பாணத்திலும், நவம்பர் 83-இல் (BAALBECK) பாஅல்பேக்கில் பிரஞ்சுப் படைகள், அக்டோபர் 87 முதல் 89 வரை இந்தியப் படைகள் யாழ்பாணத்தில்...என்று தொடர்ந்து இப் படுகொலைகள் ஏதிலிகளைத் தாக்கி வருகின்றன; கொன்றழித்துக் குவித்து வருகின்றன.

பணவலிவு அற்ற பாட்டாளி மக்களும் உழைக்கும் நடுத்தர மக்களும் மட்டுமே போர்க்கால வாழ்வின் இடுக்கண்களில் சிக்கிச் சீரழிந்து வருகின்றனர். இதனால் பொறுமையிழந்தவர்கள், பழி வாங்கத் துடிப்பவர்கள், கொடிய வெறுப்போடு எதற்கும் அஞ்சாத வன்முறையாளர்கள் பெருகி பொது அமைதியைக் குலைக்க நேரிடுகின்றது. அந்த வெறுப்பை ஆள்வோர் வெளி நாட்டார் மேல் அல்லது வேறு கருத்துத் கொண்டோர் மேல் சுமத்தி விட்டு ஒதுங்கிக் கொள்கின்றனர். சமயவெறிக் கூச்சல்கள் ஒரு சாரார்க்கும், குடிநாயக உணர்ச்சிகள் மற்றொரு சாரார்க்கும். பதவி வெறி இன்னுமொரு சாரார்க்கும்...இவ்வாருகப் பரவி வெடிபடும் சூழலுக்கு உலகைப் பண முதலாளியர் கொண்டு வந்து விட்டனர்.

இவர்களால் நடத்தப்படும் பணப்போரே இன்று நாம் காணும் ஈராக்குப் போர், இதனை நடத்துகின்ற சதாம் உசேன் கொலை வெறி பிடித்த பணப் பேயன்; ஈராக்கில் உள்ள சிறுபான்மைக் குருது (KURDS) இனமக்களை நசுக்கக் கடு வளிக்(Chemical Bombs)குண்டுகளைப் பயன் படுத்தி ஆயிரக்கணக்கில் குழந்தைகள், பெண்கள் உட்பட கொலை செய்த மா கயவாளி சதாம் உசேன்! அவனை எதிர்ப்பதாகக் கூறும் அமெரிக்காவின் யோர்சி புசு பழைய உளவு நிறுவனத் தலைவனாக (C. I. A) இருந்தபோது பல போர்களுக்கும் அழிவுகளுக்கும அடிப்படைக் காரணமாக இருந்தவன். தங்களுக்குள் பணத்தையும் பதவியையும் தக்க வைத்துக் கொள்ள—கன்னெய் அளங்களில் பெரும் போரச்சத்தால் உலகமே நடுங்கிக் கொண்டிருக்க-இப் பணப் பேய்கள் அமைதியின் பெயரால் போரைத் தொடங்கிக் கொண்டிருக்கின்றன. O

அன்பர்கள் கவனிக்க!

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும் கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் வெள்ளி, காரி ஆகிய நாள்களில் மாலை 5 மணிக்கு மேல், எழுதி இசைவு பெற்றுக் கேட்டுக்கொண்டு வருமாறு வேணடிக்கேட்டு கொள்கிறோம். O

Scanned with CamScanner

அரசியல் உள் ஊக்கிகள்!

எதனைப் பெற விரும்பினாலும் அதனைப் பெறுவதால் விளையும் பயனை எண்ணியே செயல்படுகிறோம். மிகச் சிறு தேவைகளும் அதன் பயனால் பேருதவிகளாக ஆகி விடுகின்றன. "சிறு துரும்பும் பல் குத்த உதவும்!" கையில் காசே இல்லாத நேரத்தில் கிடைக்கும் பத்துக் காசு நாணயமும் கடவுள் போலக் கண்ணுக்குத் தெரியும்!

கட்சி அரசியல் கலக்கிக் கொண்டிருக்கும் காலம் இது. "பத்தில் ஒன்று பெறுவதில் தப்பு ஒன்றுமில்லை" என்று கையூட்டிற்குக் கணக்குச் சொல்லும் கூட்டம் நம்மைச் சுற்றியுள்ளது. 'விட்டுக் கொடுப்பது" என்றாலும் "வெட்டுக் கொடுப்பது" என்றாலும் "தட்டிக் கழிப்பது" என்றாலும் "திட்டித் தொலைப்பது" என்றாலும் "கொட்டிக் கொடுப்பது" என்றாலும் "வேட்டி அவிழ்ப்பது" என்றாலும்...பயன் என்ன தேரும் என்று பார்த்துத்தான் அரசியற்காரர்கள் செய்கின்றனர்.

பாராளுமன்றத்தில் எதிரிக்குத் துணை போக வேண்டுமா? கழிப்பறையில் கால் மணி நேரம் அதிகமாகக் கழித்தால் போதும்! வரும்படி வீடு தேடி வந்து விடும்! இந்திச் சிக்கலில் சொந்தச் சிக்கல் கலக்கும்போது தொந்திச் சிக்கல் (!) ஏற்படுவது இயற்கைதானே! எத்தனைத் தொகுதிகளில் "உடன்பாடு" என்ற பெயரில் பத்தில் ஒன்றைப் பகைக்குப் பரிசளித்துப் பதவியைப் பெறுகின்றனர்

தலைமை உமிழ்ந்த இடம் நோக்கித் தலையால் நடந்து வேடிக்கை காட்டும் காற்றாடிகள் தாமே ஆட்சிக் கட்டிலில் அருகே அமர முடிகின்றது!

சாதியை ஒழிப்பது மேடைகளில் மட்டுந்தானே! அதே மேடையில் அறிஞர்கள் ஏறி, உள்ளூர்ச் சாதியான நாங்கள் சாதியை அறியாதவர்கள, உங்கள் வீட்டுப் பிள்ளை, என்றெல்லாம் செவி குளிரப் பேசும் சரக்காளர்களாக இருப்பதைக் கண்டு வருகிறோம்; சமயத்தை ஒழிப்பதும் இதே வண்ணம்தான்! காஞ்சிப் 'பெரியவாளை'க் கேட்டுச் செய்யும் பகுத்தறிவாளர்; "மொட்டைத் தலைக்கு மூடு கவிழ்க்காத முகமதியர்" என்று தம்மைத் தாமே விளம்பரப் படுத்தி, எச்சில் இலைக்கு நாக்கைத் தட்டிக் கொண்டு விருந்துண்ணும் பருந்துகள்; பிற்படுத்தப்பட்டோருக்கு இன்னும் அதிக விழுக்காடு கேட்குமாறு தூண்டிவிட்டு, அவர்களுக்குள் அது குறித்து நடக்கும் பேரிரைச்சலில் தேர்தல் வெற்றி ஈட்டிக் காட்டும் குறுநரிகள்; அந்த நேரத்தில் விலை போகக் கூடிய திரை நடிகரை பேரறிஞராக்கிக் காட்டி உளுத்துப் போன புழுத்த கருத்துக்கு ஊரையே காவு கொடுக்கும் கிலுகிலுப்பைகள்...என்று மேடையில் ஒன்றும், வாழ்வில் நடைமுறையில் ஒன்றுமாக வாழ்பவர்களையே பொது மக்கள் அன்றுடம் கண்டு வழக்கம் போல ஏமாறி வருகின்றனர். ஒரேயடியாக மக்கள் உறங்குவார்கள் என்று எந்த அரசியல்—சமய—சாதிக் குறும்பனும் நினைத்து விடுவதில்லை. எனவே, நாளுக்கொரு பொய்யும் மேடைக்கொரு மெய்யும் கூறி நாளைக் கடத்தி வருகின்றனர்.

பேருந்துத் தடங்களைத் தங்களுக்குள் பரிமாறிக் கொள்ளும் முதலைகள் எல்லாக் கட்சி—குழுவிலும் உண்டு! சாராயக் கடை ஏலக் கணக்கை எடுத்துப் பார்த்தால் பட்டையாகத் தெரியும்! எதிரியை "உதிரி" என்று ஏசி விட்டுக்கொள்முதலில் பங்கு வெட்டுவதில் சளைக்காத தலைகளை எங்கும் காண்கிறோம். குறிப்பிட்ட சில ஊழல்களை மட்டிலும் சட்ட மன்றத்திலும் பொது மேடைகளிலும் விளாசித் தள்ளுவோர் மற்ற ஊழல்களைக் குறித்து ஏன் பேச மறுக்கிறார்கள்? அந்த மற்ற ஊழல்களை மூடுவதற்கு வேளியில் வாய் மூட்டு கிடைத்து விட்டதால்தான்!

நம் நாடு மட்டுந்தான் இப்படி என்று ஏமாந்து போகாதீர்கள். இன்றைய வளரும் (!) நாடுகள் யாவுமே இதே வளர்ச்சியைத்தான் பெற்றுள்ளன.

உலகளாவிய விளையாட்டுப் பந்தயங்களில் வெற்றி தோல்விகள் கூட முற்கூட்டியே கணித்து ஒதுக்கப் பெறுகின்றன. சில நாடுகள் ஒரு பதக்கம் கூடப் பெறாத போது ஒரு சில நாடுகள் (அவர்களின் செலவில்) அந்தப் பதக்கங்களை வென்றெடுக்கும் திறமையெல்லாம் (!) புகுந்து பார்த்தால்தான் விளங்கும்! இந்திய சாகித்திய அகாதமி முதல் நோபல் பரிசு வரை அரசியல் கந்தாயத்தைக் கருதியே அளிக்கப்படுகின்றன. புரியாத பெரும்பான்மை மக்களுக்கு நோபல் பரிசு பெறுவது ஓர் அரிய செயல் என்று படும்! ஆனால், காரணகருமத்திற்காக அவை விரும்புவாருக்கு மட்டுமே வழங்கப்படுகின்ற ஊழல் அவ்வளவு சுவையானதாக இராதுதான்!

இத்தகைய ஊழலை உள்ளிருந்து ஊக்கும் "உள் ஊக்கி" அன்பளிப்பு என்றும் கையூட்டு என்றும் ஆளுக்கேற்பப் பேசப் படுகின்றது

சாதியைக் காட்டி ஒப்போலை கேட்கும் தலைவர்கள் இப்போது பிற்பட்ட சாதியினருக்குச் சற்றுக் கூடுதலான வாய்ப்புத் தர மண்டல் குழுவின் பரிந்துரையை விளம்பரப் படுத்தி ஆட்சியை இழந்தாலும் தேர்தலில் வெல்லலாம் என்று மனக்கூழ் குடிப்பதைப் பார்க்கின்றோம். மண்டல் பரிந்துரையோ ஏழையின் சாதியொழிப்போ அவர்களுக்கு ஒப்போலைக்கான உள் ஊக்கியாகத்தான் பயன்படுகின்றது!

(தொடர்ச்சி 12-ஆம் பக்கம்)

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

2. **ஆர்வலர் சிலர் வினாக்களுக்குத் துணைப் பொதுச் செயலரின் விடை:**

1) உ. த. மு. க. தன்னுறுதிக் கொள்கை—விடுதலைக் கொள்கையைத் தமிழகத்தில் முன்னெடுத்துச் செல்லுமா?

உ.த.மு.க. ஓர் உழைப்பியக்கம்; பண்பாட்டுத் தளத்தில் செயல்படும் தொண்டியக்கம். எனவே, 'உழைப்பின் வாரா உறுதிகள்' இல்லை என்ற மெய்ம்மை தெளிந்த கொள்கை இயக்கம்! இதனைத் திசை மாற்றிச் செயல்படுத்தவோ, 'செயல்படும்' எனக் காட்டவோ முயல்கின்றவர் வெல்வதில்லை. என்பது உறுதியாகும்.

2) உ. த. மு. க. போராட்டம் எம்முறையில் நிகழும்?

உ.த.மு.க. வன்முறை உத்தியையோ, மென்முறை உத்தியையோ அதன் 'தேவை' கருதிச் 'சரி' என்று கூறும் ஒரு பண்பாட்டியக்கம். 'கருத்துப் போர்' புரியுமே அன்றி, கருவிப் போர் புரியும் தேவை அதற்கேற்படாது என நம்புகிறேன்! வரலாறு அப்படி இல்லை;

3) மொழியா, இனமா உ.த.மு.க.வின் முதற் கொள்கை?

உயிரா, உடலா என்கிற வினாவிற்கு 'உடம்பு' என்ற விடையைத் தான் சொல்ல முடியும். ஆனாலும், 'தமிழினம்' கருதிய முன்னேற்றமே இன்று நம் உ.த.மு.க. முன் நிற்கிற சிக்கலாகும்!

4) தமிழினம் முன்னேற உ.த.மு.க. கூறும் வழிகள் யாவை?

i. சாதி, சமய வேற்றுமையற்ற ஒற்றுமை உணர்வு.

ii. சாதி ஒழிப்பு—சாதியற்ற (கலப்புத்) திருமணம்.

iii. உலகத் தமிழின ஓர்மை பெறுதல் (ஓர்மை—பிரக்ஞை)

iv. சமவுடைமைக் கான அரசியல்

v. உழவர் புரட்சி—புதிய மக்கள் நாயக வளர்ச்சி.

vi. மார்க்சிய—அறிவியல் வழி முறை.

இவை வழிகள்.

5) இந்தியா' திராவிடம்...பற்றி?

கடந்த கால வரலாறு. புதிய வரலாறு படைப்பதே தமிழ்த் தேசிய நோக்கமாக அமையும்.

6) 'கடவுள்' கொள்கை பற்றி...?

ஆய்வுக்கு உட்படாத எப்பொருளும் மாந்தர்க்கில்லை. மதம் 'கடவுளை' ஆய்வுக்கு உட்படுத்தாது—அறிவியல், அனைத்தையும் ஆராயும். நாம் அறிவியல் பக்கம்; மார்க்சியச் சார்பாளர். குறிப்பாக மக்கள் பக்கம்.

ஆய்வு நோக்கில்லாத கல்வி...

கல்வி, இன்று, சாதி, சமய வெறியரின் கைகளில் சிக்கி உள்ளது. அவர்கள், கல்விப் பாடங்களில் வரும் செய்திகளைத் தங்களின் சாதிக்கு எதிரான, உவப்பானவை என்றும், மதத்திற்குப் பகையான மகிழ்வானவை என்றும் காண்கின்றனர்.

காய்தல் உவத்தலின்றி எதிர்காலத் தலைமுறையின் நலங்கருதிச் சிந்திப்பவர் அதிகம் இல்லை.

புலவர். குழந்தையின் இராவண காவியம்... இன்று பாடத் திட்டத்தில் உள்ளது. கடந்த காலத்தில் அதனைத் தடை செய்திருந்த அரசு, தி.மு.க, ஆட்சிக்காலத்தில் தடை நீக்கம் பெற்றது. 'இராவண காவியம்'!

இதனை இன்று இந்து முன்னணி' பாட நூலிலிருந்து நீக்கும்படியும், இராமனை இழிவு படுத்தும் பகுதி என்றும் கூறிக் கண்டனமும் செய்துள்ளது.

இதனைவிட 'இந்து முன்னணி' என்கிற அமைப்பு, 'கல்வியை நடுவணரசு கவனமாகக் கண்காணிக்க வேண்டும்' என்றும் கூறுகிறது. கல்வியை அந்தந்த அரசு(மாநில)களின் உரிமை என்பதற்காகப் போராடும் நாம் 'இந்து முன்னணி' கோரும் இம் மக்கள் எதிர்ப்புக் கொள்கையை எதிர்த்து நிற்றல் வேண்டும்!

ஆய்வு நோக்கற்ற இந்து மதச் சிந்தனையை அறிவாளர் அம்பலப் படுத்தல் வேண்டும்.

—பறம்பை அறிவன்.

விரைவில் வெளிவரவிருக்கிறது!

பாவலரேறு பெருஞ்சித்திரனாரின்

அரிய கருத்துரைகள் அடங்கிய கருவி நூல்!

தமிழீழப் போராட்டத்தின் முழுவடிவமும், போராளிகளின் முயற்சிகளும், சிங்கள, இந்திய அரசியல் சூழ்ச்சிகளும் உள்ளடங்கிய அரிய நூல்!

தமிழீழம்

(போராளிகளும், போராட்ட முயற்சிகளும்)

1970 முதல் இதுவரை ஆசிரியர் தென்மொழி, தமிழ்நிலம் ஆகியவற்றில் அவ்வப் பொழுது எழுதிய அரிய கட்டுரை, பாடல்களின் தொகுப்பு! ஏறத்தாழ 550 பக்கங்கள் கொண்டது!

55 உருபா மதிப்புள்ள நூல்! முழுத்தொகையும் முன்னதாக அனுப்பிப் பதிவு செய்து கொள்பவர்களுக்கு நூல் வெளி வந்தவுடன் இலவயப் பதிவஞ்சலில் அனுப்பி வைக்கப் பெறும். முன்பே 35 உருபா விடுத்தவர்கள், மேலும் உரு 20 விடுக்கவும்.

Scanned with CamScanner

(10-ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாபர் மசூதியை ஒழித்து இராமன் கோயிலைக் கட்டக் கிளம்பிய பிராமண வெறியர்களின் வட-இந்திய இந்து மகாசபை, விசுவ இந்து பரிசத்து, இராட்டீரிய சுயம் சேவச் சங்கம் (RSS), சிவசேனை, நாகசேனை கூடாரங்களும், கன்னிக் குமரிமுனையை இந்து வெறிக்குள் ஆழ்த்த விவேகானந்தன் பெயரால் பாறையும், கல்லூரிகளும் இயக்கங்களும் காட்டி அயோத்தி கோயிலைப்போல விவேகானந்தன் பாறைக் கோயிலைத் தூய்மைப்படுத்தக் கிளம்பி வெளிப்படையாகவே "துக்ளக்" ஏட்டில் ஆரிய நஞ்சை அளவுக்கும் அதிகமாகவே கக்கி வரும் வெறியன் சோ கூட்டங்களும் எப்படியாவது தேர்தலில் வென்றோ, சமய வெறியால் சாகின்ற கும்பலைக் காட்டி இன மேலாண்மை கெடாமல் பார்த்துக் கொண்டோ காலம் கடத்த விரும்புகின்றனரே! இதில் பாபருக்கும் இராமனுக்கும் விவேகானந்தனுக்கும் உள் ஊக்கி என்ற பொருளே தவிர அறிவான அன்பான இனிமையான பொருள் இருக்க முடியுமா?

உள் ஊக்கி நோக்கி எல்லாரும் ஓடுகின்ற போழ்து **தென்மொழி** முகப்பில் தொடர்ந்து வெளியிடும்-காலத்தால் அழிக்க முடியாத—தென்மொழிக் கொள்கையின் உண்மை ஒளி, யாருக்குத் தெரியப் போகிறது? "சோ"மாறிகளும் ஊழல் ஏறிகளும், படங்காட்டிகளும், பதவியாடிகளும், இனக்கேடிகளும், பணக்கோடிகளும், உள் ஊக்கிகளை உருவாக்கிடும் நாட்டையே சூறையாடி வருகின்றனர்!

இந்தியத் துணைக் கண்டத்தின் "மண்டேலா" என்று அழைத்து மதிப்பளித்துப் போற்றப்பட வேண்டிய பேரறிஞர் **பெருஞ்சித்திரனர்** அவர்களை இருளிலும் வறுமையிலும் கூடிய வரை பொது மக்கள் அறிந்து கொள்ளாதவாறு முடக்குகின்ற "திரவிடம்" பேசும் கரவடக் கழகங்களின் ஆட்சிக் காலங்களில் உள் ஊக்கி இல்லாத(?!) தென்மொழி உண்மைகள் எடுபடவே வழியில்லாமல் உள்ளன.

பின் வரப் போகும் தமிழ்நாட்டினருக்குக் கைக்கருவியாகவும், அகத் துடிப்பாகவும், இன மறுமலர்ச்சிக்கான காரணியாகவும் விளங்கப் போகும் **தென்மொழி**யின் ஆவண முத்திரைகளை இன்றைய தமிழ் உலகில் புறக்கணிப்புச் செய்து திட்டமிட்டு அறிவுக் கொலை புரிகின்ற அத்துணைப் பேரும் வரலாற்றில் இழிவாக எழுதப்படும் அவலத்தை இனி வரப் போகும் காலம் காட்டத்தான் போகின்றது!

உள் ஊக்கியைத் தேடும் உயர் அறிவு வாழ்க! உணர்வை உண்மையை மூடும் கொள்ளிகள் எரிக! உயிரும் உடம்பும் ஓயும் வரை உருப்படாத தமிழினம் உருக்குலைந்து போகுக! உண்மையான தமிழர்கள் என்றாவது ஒரு நாள் இதனை எண்ணி வருந்தத்தான் போகின்றனர்.

—த. அரிமா வளங்கோ.
பிரான்சு.

பொறுத்துக் கொள்க!

பல வகையான அச்சக நெருக்கடிகளாலும், புறநிலை இடர்ப்பாடுகளாலும் இதழ்கள் காலந் தாழ்ந்து வெளி வருகின்றன. அன்புள்ளங்கள் பொறுத்துக் கொள்க.

—ஆசிரியர்.

உ.த.மு.க.வின் உயர்ந்த கொள்கைகள்!

1) தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்!
2) சாதியற்ற, மத வேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்!
3) இழிவுகளும், பூசல்களும், ஏமாற்றும் இல்லாத அரசியல்!
4) தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்!
5) மனம், அறிவு, வாழ்க்கை இவற்றை வளப்படுத்தவும், நலப்படுத்தவுமான அரு வருப்பற்ற கலை வளர்ச்சி!
6) பழந்தமிழ் மரபுக்கும், மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்!
7) எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை!

சிந்தனைக்கு - 59

பதவிக்காகப் போராடுகிறவர்கள் மக்களுக்காகச் சிந்திக்கவோ உழைக்கவோ மாட்டார்கள்; ஆனல் அவ்வாறு செய்வதுபோல் நடிப்பார்கள்.

(மாதம் இருமுறை வெளிவரும்) இதழ் எண். 142

அனுப்புதல்:

தமிழ்நிலம்

5, அருணாசலத் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை-5

தொலைபேசி எண்: 847829

உறுப்பினர்:

தனி இதழ் விலை	உரு. 1-00
ஆண்டுக் கட்டணம்	உரு. 50-00
அரையாண்டுக் கட்டணம்	உரு. 25-00

தமிழர் ஒவ்வொருவரும் கட்டாயம் படிக்க வேண்டிய இதழ்கள்! தமிழ்நிலம், தென்மொழி, தமிழ்ச்சிட்டு!

ஆசிரியரும், வெளியிடுபவரும்:
பாவலரேறு பெருஞ்சித்திரனர்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம்,
5, அருணாசலத் தெரு, சென்னை-5.